Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# The Values of 'Kalaviyal' and Sustainable Development

**Dr. P. Rajkumar,** Head & Associate Professor of Tamil, Bishop Heber College, Thiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1393-6794
**DOI: 10.5281/zenodo.7549931**

## Abstract

*Tolkappiyar was the one who grammatically laid out the elements of life that should be lived in this way, thousands of years before people lived in the world thinking that it was enough to live in any way. This article presents the value concept that emerges in the field of Porulathikaram - Kalaviyal in Tolkapiyam. Kalavu is the Tamil tradition of love life where two minds are united. It is a social value. It is the hypothesis of the study that the way of cultural teachings of such ancestors can bring about a good manner in the minds of the people away from the thoughts of violence against women. The discipline of love shown by 'Kalaviyal' is that a man who likes a woman expects a sign of approval from her gaze and pursues courtship only after approval. It is a unique cultural symbol of Tamil society that the consent of the woman is sought for the union of souls. Tolkappiyam suggests that it is the nature of the man to walk away without causing any harm to the woman, perhaps if she does not express her consent. It is an unparalleled expression of Tamil society. Tamil literature and grammar lessons are necessary for the lasting development of such values.*

**Keywords**: Values, Kalaviyal, Sustainable, Development.

## References

[1] Karthikesu Sivathambi, *History and Poetry*. Kumaran Book House, Colombo, 2007.
[2] Gopalakrishnamacharyar, Vai. M. (Text). *Kambaramayanam Sundara Kandam*. Uma Publishing House, Chennai, 2007.
[3] Sivalinganar, A. (Ed.). *Tholkappiyam Uraivalam*, Porulathikaram, Kalaviyal, Ulaga Tamilaraichi Niruvanam, Chennai, 1994.
[4] Sundaramurthy, K. (Ed.). *Tholkappiyam Porulathikaram (Volume 2)*, Annamalai University, Chidambaram, 1986.
[5] Puliyur Kesikan (Ed). *Tirukkural Parimelazagar Urai*, Poombukar Publishing House, Chennai, Sixth Edition,1995.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# களவியல் விழுமியமும் நிலையான வளர்ச்சியும்

**முனைவர் பா. இராஜ்குமார்**, தலைவர், இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 17, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-1393-6794**
**DOI: 10.5281/zenodo.7549931**

**ஆய்வுச் சாரம்**

*உலகில் மனிதன் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்று வாழ்ந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படித்தான் வாழ வேண்டும் என்கிற வாழ்வியல் கூறுகளை இலக்கணமாக வகுத்துத் தந்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பொருளதிகாரத்தின் களவியலில் வெளிப்படும் விழுமியக் கருத்தை முன்வைக்கிறது இக்கட்டுரை. களவினை இருமனம் ஒன்றுபடும் காதல் வாழ்வின் ஒழுக்கம் என்றது தமிழ் மரபு. அது ஒரு சமூக மதிப்பு. இத்தகைய முன்னோர்களின் பண்பாட்டு எடுத்துரைப்புகளின் வழி, மக்களின் மனதில் பெண்களுக்கெதிரான வன்முறை எண்ணங்களிலிருந்து நீங்கிய நன்முறையை ஏற்படுத்த முடியும் என்பது ஆய்வின் கருதுகோளாகும். தலைவியை விரும்பும் தலைவன் அவளது பார்வையில் ஒப்புதல் குறிப்பை எதிர்பார்ப்பதும், ஒப்புதலுக்குப் பிறகே பிறவற்றைத் தொடர்வதும் களவியல் செய்தி. இவ்வாறு உள்ளங்கள் ஒன்றுபடும் உள்ளப் புணர்ச்சிக்கே பெண்ணின் ஒப்புதலை வேண்டி நிற்பது என்பது தமிழ்ச் சமூகத்தின் ஒப்பற்ற பண்பாட்டு அடையாளமாகும். ஒருவேளை பெண்ணின் ஒப்புதலை அவள் வெளிப்படுத்த வில்லையானால் மேற்கொண்டு எதுவும் நிகழ்த்தாமல், அப்பெண்ணுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படுத்தாது விலகிச் செல்லும் ஆணின் இயல்பு தமிழ்ச் சமூகத்தின் இணையற்ற விழுமிய வெளிப்பாடு. இத்தகைய மதிப்புமிக்க களவொழுக்கம் போற்றப்படாமையானும், மக்கள் மனதில் அத்தகைய சமூக மதிப்புகள் நிலை பெறாமையானும் ஏற்பட்டுள்ள சிக்கலை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. இத்தகையச் சமூக விழுமியங்களின் நீடித்த வளர்ச்சிக்குத் தமிழ் இலக்கிய, இலக்கண எடுத்துரைப்புகள் அவசியமாகின்றன.*

**குறிப்புச் சொற்கள்:** களவு ஒழுக்கம், விழுமியம், சமூக மதிப்பு, பெண்ணின் ஒப்புதல், பெருமை.

## முன்னுரை

உலகில் மனிதன் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்று வாழ்ந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படித்தான் வாழ வேண்டும் என்கிற வாழ்வியல் கூறுகளை இலக்கணமாக வகுத்துத் தந்தவர் தொல்காப்பியர்.தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பொருளதிகாரத்தின் களவியலில் வெளிப்படும் விழுமியக் கருத்தை முன்வைக்கிறது

இக்கட்டுரை. களவினை இருமனம் ஒன்றுபடும் காதல் வாழ்வின் ஒழுக்கம் என்றது தமிழ் மரபு. அது ஒரு சமூக மதிப்பு.

**கருதுகோள்**

இத்தகைய மதிப்புமிக்க களவொழுக்கம் போற்றப்படாமையானும், மக்கள் மனதில் சமூக மதிப்புகள் நிலை பெறாமையானும் ஏற்பட்டுள்ள சிக்கலை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. தலைவனின் காதல் விருப்பத்தினை தலைவி ஏற்கவில்லையானால் மேற்கொண்டு, காதலைத் தலைவன் தொடர்வதில்லை என்னும் களவியல் விழுமிய வெளிப்பாட்டை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. அதனடிப்படையில் முன்னோர்களின் இத்தகைய மரபார்ந்த பண்பாட்டு எடுத்துரைப்புகளின் வழி, மக்கள் மனதில் பெண்களுக்கெதிரான வன்முறை எண்ணங்களிலிருந்து நீங்கிய நன்முறையை ஏற்படுத்த முடியும் என்பதை ஆய்வின் கருதுகோளாகக் கொண்டு கட்டுரை மேற்செல்கிறது.

**களவின் மேன்மை**

'கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறையிற் கொள்ளுங் களவன்றாயிற்று. இது வேதத்தை மறைநூல் என்றாற் போலக் கொள்க' என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுவார். (ப.12) இதன் மூலம் களவு வாழ்வின் மேன்மை புலப்படும். மேலும் 'எளிதில் யார்க்கும் புலப்படாமல் நுண்ணியவாக மறைந்து கிடக்கும் பொருள்கள் மறை எனப்பட அவற்றைக் கூறும் நூல் (வேதம்) மறை எனப்பட்டது போல பிறருக்குப் புலப்படாமல் தம்முள் காதலர் இருவர் மறைவாகக் கொள்ளும் ஒழுக்கம் களவு எனப்பட்டது. பிறர் பொருளை மறைவிற் கொள்ளும் களவு போன்றதன்று இக்களவு.' என்று விளக்கக் குறிப்பளிப்பார் ஆ. சிவலிங்கனார். (பக்.12, 13) எனவே களவு என்பது ஒழுக்கத்தின் பாற்படுகிறது.

**உள்ளக் கலத்தல்**

"மணம் என்னும் சொல் கலத்தல் என்னும் பொருளது. உடம்பாற் கலத்தலை மட்டும் தமிழர் மணம் என்னும் சொல்லாற் குறித்தல் இல்லை. உள்ளத்தாற் கலத்தலையும் மணம் என்னும் சொல்லாற் குறிப்பர் என்பார் சிவலிங்கனார்" (ப.20). இத்தகைய உள்ளக் கலத்தலே இயற்கைப் புணர்ச்சியாய் களவை நீட்டிக்கிறது. ஊழ் வயத்தார் கூடுதலை இயற்கைப் புணர்ச்சி என்பர். ஊழ் என்பது இயற்கை என இங்கு பொருள் கொள்ளப்படுகிறது. இதனையே,

> **களவெனப் படுவது யாதென வினவின்**
> **... ஆயமும் தோழியும் மருவிநன் கறியா**
> **மாயப் புணர்ச்சி என்மனார் புலவர் (சிவலிங்கனார், ஆ. *களவியல்*, ப. 13)**

என எடுத்துக் காட்டுவார் நச்சினார்க்கினியர். தலைவனும் தலைவியும் முதன் முதலில் ஒருவரை ஒருவர் காணும் காட்சியிலிருந்து களவு வாழ்வு தொடங்குகிறது.

**கண்ணால் நிகழ்த்தும் உரை**

காட்சி, ஐயம், தெளிவு என்பன தலைவன் மாட்டு வெளிப்படையாக நிகழ்வது போலத் தலைவி மாட்டு நிகழாது. சிறிதளவு குறிப்பாய் நிகழும். அத்தகையக் குறிப்பு, பார்வையாலேயே நிகழும். இதனையே தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவாக அமைக்கிறார்.

**நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்**
**கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும் (களவியல்: 5)**

இதனை விளக்கும் நச்சினார்க்கினியர் 'கண்ணால் உரை நிகழ்த்தும் என்பதூஉம்' எனக் குறிப்பிடுவார். தலைவியின் குறிப்பறியாது அவளது உள்ளக் கருத்தை, உடன்பாட்டை அறியாது செயல்பட்டால் அது பெருந்திணையின் பாற்படும். பொருந்தாத மனம் ஆகும் என இளம்பூரணர் விளக்கிச் செல்வார்.

"தலைவன் தலைவியரின் இரண்டு கண்களும் ஒருவர் அறிவை ஒருவர் அறிவோடு ஒருப்படுத்தற்குத் தத்தம் வேட்கையோடு காம உணர்வினை கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்" (ப.45) என்பார் சிவலிங்கனார்.

மேலும் 'புகுமுகம் புரிதல்' என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவிற்கு (261) விளக்கம் அளிக்கும் பேராசிரியர் மேற்கண்ட நூற்பாவைக் காட்டி 'ஒன்று ஒன்றை ஊன்றி நோக்குதலின் நாட்டமென்றார்' என்று விளக்கம் தருவார். அவ்வாறு பேராசிரியர் குறிப்பிடுவதை இங்கு நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுவார் (சிவலிங்கனார் ஆ., (தொகு), தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் களவியல்,ப. 44). புகுமுகம் புரிதல் என்பது தலைவிக்கு உரிய முதல் நிலை மெய்ப்பாடாகும் என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. இதனை விளக்கமாக,

**கண் இணை புகுமுகம் புரிதலின் காரிகை**
**உள்நிறை வேட்கை உரவோற்கு உணர்த்தும். (*மாறனலங்காரம்*)**

என்று *மாறனலங்காரம் குறிப்பிடும் (ப.41).* மேற்கண்ட விளக்கங்கள் யாவும் தலைவியின் விருப்ப வெளிப்பாட்டை உறுதி செய்கின்றன. இருவரது உணர்ச்சியும் ஒன்றுபட்டதாகி அறிவு வயப்பட்டு ஒன்றாவதற்குத் தலைவியின் குறிப்பால் உணர்த்துதல் அதாவது பார்வையால் உணர்த்துதல் தேவை என்கிறது அந்நூற்பா. அதாவது தலைவனது பார்வையைத் தலைவி ஏற்க வேண்டும். அதனைக் குறைந்தபட்சம் குறிப்பால், தனது பார்வையினால் உணர்த்துவாள் என்பதும் அதனை அறிந்து உணர்ந்தே தலைவன் செயல்படுவான் என்பதும் களவு மரபு. தமிழர்களின் காதல் மரபு. தமிழர்களின் சமூக மதிப்பு. உணர்ச்சியும் அறிவும் ஒன்றுபடுதல் வேண்டும் என்கிற உளவியல் இந்நூற்பாவின் வழி வெளிப்படுகிறது.

**தலைவியது காதல் ஏற்பு**

**குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்.**

**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர் (களவியல்: 6)**

தலைவியின் ஏற்பு, ஒப்புதல் இல்லையெனில் களவு தொடராது என்கிற தமிழர்களின் களவு ஒழுக்கத்தை இந்நூற்பா முன் வைக்கிறது. குறிப்பால் உணர்த்துதலைச் சொன்ன தொல்காப்பியர் தொடர்ந்து தலைவனது காதல் குறிப்பை தலைவி தனது பார்வையால் ஏற்றுக் கொள்வாளாயின் அதன் பிறகு மற்றவை நிகழும் என்று முடிந்த முடிவாகச் சுட்டிக் காட்டுகிறார். தலைவனது காதல் குறிப்பை தலைவி ஏற்றுக் கொள்ளவில்லையானால் பிற எவையும் நிகழாது என்பதுதான் களவியல் வெளிப்படுத்தும் காதல் விழுமியம். தலைவியின் ஏற்றுக்கோடல் இன்மை என்கிற சூழலில் தலைவன் ஒதுங்கிப் போய் விடுவான், மேற்கொண்டு எதுவுமே நிகழாது என்கிற சமூக மதிப்பு இங்கே வெளிப்படுகிறது.

**மேவுசிந்தை இல் மாதரை மெய்தொடின்**
**தேவு வன் தலைசிந்துக நீ" என**
**பூவில் வந்தபுராதனனே புகல்**
**சாவம்உண்டு;எனது ஆர்உயிர் தந்ததால் (சூடாமணிப் படலம் 21)**

எனக் கம்பன் நினைவுறுத்துவது 'உடன்படாதப் பெண்ணை வலியத் தீண்டுவானாயின் இராவணன் தலை வெடித்து இறக்கக் கடவன்' என்பதே. இப்படிச் சாபம் இருப்பதாகக் கம்பன் பதிவு செய்திருப்பது, மேற்சொன்ன சமூக மதிப்பீட்டின் வளர்ச்சி நிலையையே காட்டுகிறது. விரும்பாத பெண்ணின் முகத்தில் அமில வீச்சு, தப்பிக்க வழியற்ற சூழலில் அகப்பட்ட பெண்களின் தற்கொலை முயற்சி, இரயில் நிலையப் படுகொலைகள் இப்படி எத்தனை எத்தனையோ... காதலை ஏற்காதப் பெண்களை வேட்டைப் பொருளாக்கும் மனித விலங்குகளுக்கு முடிவு தான் என்ன? களவு வாழ்வில் கூட ஒழுக்கமும் விழுமியமும் சமூக மதிப்பும் ஓங்கி வளர்ந்த தமிழ்ச் சமூகத்தில் இத்தகைய ஒழுக்கக் கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாள் எந்நாளோ?

**வள வாய்ப்பு**

இத்தகைய அவலங்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூக மதிப்பீடுகளின் நிலையான வளர்ச்சியின்மையினால் ஏற்படும் சிக்கல்களையே வெளிப்படுத்துகின்றன. அதே சமயத்தில் மேற் சொன்ன தொல்காப்பியர் காட்டும் சமூக மதிப்பை, விழுமியத்தை "NO MEANS NO" என்கிற உன்னதமான கருத்தின் வழியாகத் திரைப்படங்களும் வெளிப்படுத்திக் கொண்டுதான் உள்ளன. மனைவியாக இருந்தால் கூட அவளது அனுமதியின்றி தொடக் கூடாது என்பதை அப்படத்தின் நாயகன் மிக அழுத்தமாகவே பதிவு செய்துள்ளார். இது போன்ற சில நல்ல விடயங்கள் வள வாய்ப்பை வெளிப்படுத்துகின்றன.

**ஆங்கவை நிகழாது**

இனி நூற்பாவில் இடம்பெறும் 'ஆங்கவை' என்று குறிப்பிடப்படுவது எவை என்பதை ஆராய்வோமேயானால் உயர்ந்த சமூக மதிப்பீட்டை மேலும் உணர்ந்து கொள்ள ஏதுவாகும். இந்நூற்பாவில் வரும் அவை என்பதை தலைவி கண்ணினால் காட்டும் குறிப்புரை

என்றே இளம்பூரணர் குறிப்பிடுவார். அதாவது முந்தைய நூற்பாவிற்குப் புறநடையாகவே இந்த நூற்பா அமைவதாக இளம்பூரணர் கருதுகிறார். அதாவது அதே கருத்தை மீண்டும் வழிமொழிவதாக அல்லது கூட்டி உரைப்பதாகவே இளம்பூரணர் கொள்கிறார்.

நச்சினார்க்கினியரோ, இந்நூற்பாவில் இடம்பெறும் ஆங்கவை என்பது பின்னர் வரும் மெய்ப்பாட்டியலில் கூறப்படும் புகு முகம் புரிதல் முதலாக இருகையும் எடுத்தல் என்பது ஈராக வரும் 12 மெய்ப்பாடுகளையே குறிக்கும் என்று கருதுகிறார். ஆனால் இவை இரண்டுமே பொருந்துவனவாகத் தோன்றவில்லை. இதை வெள்ளைவாரணனார் மிகத் தெளிவாக தனது விளக்க உரையில் மறுக்கிறார். “இந்நூற்பாவில் வரும் 'அவை' என்னும் சுட்டு கண்ணினான் வரும் குறிப்புரையினைச் சுட்டியது எனக் கொண்டார் இளம்பூரணர். அவை என்பது புகுமுகம் புரிதல் முதலாக இருகையும் எடுத்தல் ஈராகப் பின்னர் மெய்ப்பாட்டியலிற் கூறப்படும் மெய்ப்பாடு பன்னிரண்டனுள் 'பொறிநுதல் வியர்த்தல்' முதலிய பதினொன்றனையும் சுட்டியது எனக் கொண்டார் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் கூறும் கண்ணினான் வரும் குறிப்புரை மேலைச் சூத்திரத்தில் 'நாட்டம் இரண்டும் கூட்டியுரைக்கும் குறிப்புரை' என விளக்கம் பெற்றமையின் அதனையே இச் சூத்திரமும் சுட்டியது எனக் கொள்ளுதல் கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படுதலானும், இடம் வரையாது நூற்பாவில் வரும் 'அவை' என்னும் சுட்டு அதன் அணித்ததாக முன்னோ பின்னோ உள்ளவற்றைச் சுட்டுவதன்றி இவ்வியலின் மூன்றாம் இயலாகிய மெய்ப்பாட்டியலில் விரித்துரைக்கப்படும் பன்னிரண்டு மெய்ப்பாடுகளுள் பதினொன்றினை மட்டும் வரைந்து சுட்டுதல் இயலாததாகலாறும் உரையாசிரியர்கள் இருவரும் கூறும் உரைகள் தொல்காப்பியனார் கருத்தினைப் புலப்படுத்துவனவாக அமையவில்லை” என்று தெளிவாக விளக்கமளிக்கிறார் வெள்ளைவாரணனார். (*தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் களவியல்*, ப. 48)

எனவே தலைவியின் வேட்கை ஒப்புதல் இல்லாமல் களவு வாழ்வில் மேற்கொண்டு எதுவும் நிகழாது என்பதையே இந்நூற்பா தெளிவாக வரையறை செய்கிறது.

**களவில் தொடர்வன**

களவில் மேற்கொண்டு நிகழ்வது என்ன என்பதை பின்வரும் நூற்பா சுட்டுகிறது.

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்**
**சிறப்புடை மரவினவை களவு என மொழிப (களவியல் – 9)**

என்று தொல்காப்பியர் நூற்பா வகுத்துத் தருகிறார். எனவே தலைவனது காதல் நோக்கை தலைவியின் கண்கள் ஏற்கவில்லையானால் மேற்காணும் எவையும் நிகழாது என்பது தெளிவாகிறது. அதாவது களவின் தொடர்ச்சி என்பது தலைவனுடைய பார்வைக்குப் பின்பு தலைவியினுடைய ஒப்புதலின்றி தொடராது என்பதே சமூக மதிப்பு. இதன்வழி மூவாயிரம்

ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் மாத்திரம் அல்ல அவரே அந்த நூற்பாவில் குறிப்பிடும் 'என்மனார் புலவர்' என்பதிலிருந்து அவருக்கும் முன்பிருந்தே தமிழ்ச் சமூகத்தின் முன்னோர்கள் வகுத்துத் தந்திருக்கிற விழுமியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

**தலைவனது மன்னிய குணங்கள்**

தலைமகனும் தலைவியினுடைய ஒப்புதல் இன்றி வேறு களவு சார்ந்த வாழ்க்கையின் தொடர்ச்சி எதையும் செய்ய மாட்டான் என்பதை வலியுறுத்துவதற்காகவே அடுத்த நூற்பாவில் ஆண் மகனது இயல்பு பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அதனை ஆண் மகனுக்கான இலக்கணமாகவே இளம்பூரணரும் சுட்டுகிறார். **“பெருமையும் உரனும் ஆடூஉ மேன” (7)** என்று அந்த நூற்பா அமைகிறது. தலைவனது குறிப்பை அவனது காதல் விருப்பத்தை தலைவி ஏற்றுக்கொண்டு குறிப்பால் உணர்த்தினால் மட்டுமே ‘ஆங்கு அவை நிகழும்’ என்று சொன்ன தொல்காப்பியர் அடுத்து வருகின்ற நூற்பாவில் ஆண் மகனது இயல்பு பற்றிக் குறிப்பிடுவதன் அவசியம் என்ன என்பது சிந்திக்கத்தக்கது. இவற்றை ஆணினுடைய நிலைத்த குணங்களாக அதாவது, **“பொருவிறந் தோற்குப் பெருமையும் உரனும் மன்னிய குணங்கள்” (35)** என்று நம்பியகப்பொருள் வலியுறுத்துகின்றது. இந்நூற்பாவில் இடம்பெறும் பெருமையும் உரனும் என்பன மிகுந்த கவனத்தில் கொள்ள வேண்டிய வார்த்தைகளாகவே விளங்குகின்றன. இதற்கான விளக்கத்தில் ' பெருமையாவது - பழியும் பாவமும் அஞ்சுதல், உரன் என்பது - அறிவு ' என்று குறிப்பிடுவார் இளம்பூரணர் (ப. 50). மேலும் அறிவு எனபதனை விளக்கும் வகையில்,

**நன்றின்பால் உய்ப்பது**

**சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ**
**நன்றின் பாலுய்ப்ப தறிவு (குறள்- 422)**

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதாவது மனதைச் சென்ற இடமெல்லாம் செல்ல விடாமல் தீமையினின்றும் நீக்கி நல்லதன்கண் செல்லவிடுவது அறிவு ஆகும் என்று குறிப்பிடுகிறார். மனம் போன போக்கில் போகாமல் உணர்ச்சிகளை நன்றின்பால், நல்ல செயலின்பால், நல்ல எண்ணத்தின் பால் நடத்துவது தான் அறிவு என்கிறார்.

எனவே பழி பாவத்திற்கு அஞ்சுவதைத் தன்னுடைய குணமாகக் கொண்ட தலைவன், நன்றின்பால் உய்க்கும் அறிவுடைய ஒரு தலைவன், ஓர் ஆண்மகன் சம்மதம் இல்லாத, தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தாத, காதலை ஏற்காத ஒரு பெண்ணை எப்படி மேற்கொண்டு காதல் செய்வான்? செய்ய இயலாது. அப்படிச் செய்வது ஆண் மகனது இயல்புமன்று. பண்புமன்று. ஆண்மையுமன்று. இதனை விளக்குவதற்காகவே ஆணினது குணத்தை நுட்பமாக இவ்விடத்தில் தொல்காப்பியர் அமைத்திருக்கிறார்.

**முடிவுரை**

இவ்வாறு உள்ளங்கள் ஒன்றுபடும் உள்ளப் புணர்ச்சிக்கே பெண்ணின் ஒப்புதலை வேண்டி நிற்பது என்பது தமிழ்ச் சமூகத்தின் ஒப்பற்ற பண்பாட்டு அடையாளமாகும்.

ஒருவேளை பெண்ணின் ஒப்புதலை அவள் வெளிப்படுத்த வில்லையானால் மேற்கொண்டு எதுவும் நிகழ்த்தாமல், அப்பெண்ணுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்தாது விலகிச் செல்லும் ஆணின் இயல்பு தமிழ்ச் சமூகத்தின் ஈடு இணையற்ற விழுமிய வெளிப்பாடு. இத்தகைய சமூக விழுமியங்களின் நீடித்த வளர்ச்சிக்குத் தமிழ் இலக்கிய, இலக்கண எடுத்துரைப்புகள் அவசியமாகின்றன. களவு என்கிற திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்விலும் உயர்ந்த விழுமியங்கள் போற்றப்படவேண்டும் என்கிற உணர்வு, இன்றைய ஆண், பெண் என இருபால் உள்ளத்திலும் ஓங்கட்டும். அதற்கு இக்கட்டுரை ஒரு துளியேனும் உதவட்டும் …

**துணை நின்றவை**

[1] கார்த்திகேசு சிவத்தம்பி. *தொல்காப்பியமும் கவிதையும்.* குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2007.

[2] கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை. மு. (உரை). *கம்பராமாயணம் சுந்தர காண்டம்.* உமா பதிப்பகம், சென்னை, 2007.

[3] சிவலிங்கனார், ஆ. (தொகு). *தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் களவியல்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994.

[4] .சுந்தரமூர்த்தி, கு. (பதி). *தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி 2).* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1986.

[5]. புலியூர்க் கேசிகன். (பதி). *திருக்குறள் பரிமேலழகர் உரை.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1995.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.